**சுருக்கம்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் – கல்வி – விடுதிகள் – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கான பல்வகைச் செலவினத் தொகையை மாதம் ஒன்றுக்கு பள்ளி மாணவ, மாணவியருக்கு ரூ.25/–லிருந்து ரூ.50/–ஆகவும், கல்லூரி மாணவ, மாணவியருக்கு ரூ.35/–லிருந்து ரூ.75/– ஆகவும் உயர்த்தி வழங்கி ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந1) துறை**

**அரசாணை (நிலை) எண்: 7** **நாள்: 18.01.2012**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண். 50, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள். 11.6.2007.
2. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கடித எண். பி2/2143/2010, நாள். 5.9.2011.

* * * * * * * *

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் பள்ளி மாணவ, மாணவியருக்கு பல்வகைச் செலவினத் தொகையினை மாதம் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.15/–லிருந்து ரூ.25/–ஆக உயர்த்தியும், கல்லூரி மாணவ, மாணவியருக்கு ரூ.15/–லிருந்து ரூ.35/–ஆக உயர்த்தியும் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

2. சட்டமன்றப் பேரவையில் 2011–12–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் முடிவில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் அவர்களால் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலப் பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கான பல்வகை செலவினத் தொகையை பள்ளி விடுதிகளில் நபர் ஒருவருக்கு, மாதமொன்றுக்கு ரூ.25/–லிருந்து ரூ.50/– ஆகவும், கல்லூரி விடுதிகளில் நபர் ஒருவருக்கு ரூ.35/–லிருந்து ரூ.75/–ஆகவும் உயர்த்தி வழங்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், இத்துறையின் கீழ் இயங்கும் 1238 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கிப்பயிலும் பள்ளி மாணவர், மாணவியருக்கு வழங்கப்படும் பல்வகைச் செலவினத் தொகையை நபர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூ.25/–லிருந்து ரூ.50/–ஆகவும், கல்லூரி மாணவர், மாணவியருக்கு ரூ.35/–லிருந்து ரூ.75/–ஆகவும் உயர்த்தி வழங்க ரூ.2,01,37,000/– ஆண்டொன்றுக்கு கூடுதலாக செலவாகும் என்று தெரிவித்து அதற்கான நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

4. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆராய்ந்து, தற்போது இத்துறையின் கீழ் இயங்கும் 1238 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் பள்ளி மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்டு வரும் பல்வகைச் செலவினத் தொகையை மாதம் ஒன்றுக்கு மாணவர்/மாணவியர் ஒருவருக்கு ரூ.25/–லிருந்து ரூ.50/– ஆகவும், கல்லூரி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு மாணவர்/மாணவியர் ஒருவருக்கு ரூ.35/–லிருந்து ரூ.75/– ஆகவும் உயர்த்தி வழங்கவும், இச்செலவின உயர்வினை இவ்வரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து செயல்படுத்திடவும் ஆண்டொன்றுக்கு இதற்கான கூடுதல் செலவினம் ரூ.2,01,37,000/–ஐ (ரூபாய் இரண்டு கோடியே ஒரு இலட்சத்து முப்பத்து ஏழாயிரம் மட்டும்) அனுமதித்தும், நடப்பு 2011–12–ம் நிதி ஆண்டில் இதற்கான கூடுதல் செலவினம் ரூ.60,41,100/– (ரூபாய் அறுபது இலட்சத்து நாற்பத்தோராயிரத்து நூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்படவேண்டும்.

**1. பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் – ரூ.34,12,650/– (2011–12)**

“2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JA - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள் –99 – பல்வகை”.
(த.தொ.கு. 2225–03–277–JA-9901) – **ரூ.1,13,75,500/– (ஆண்டொன்றுக்கு)**

**2. மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் – ரூ.2,02,215/– (2011–12)**

(i) “2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி I திட்டத்தில் சேராதது – BC – மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள் – 99 – பல்வகை”.
(த.தொ.கு. 2225–03–277–BC–9905) – **ரூ.6,74,050/– (ஆண்டொன்றுக்கு)**

(ii) **ரூ.14,67,195/– (2011–12)**

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – KA - மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள் – 99 – பல்வகை".
(து.தொ.கு. 2225–03–277–KA–9900) – **ரூ.48,90,650/– (ஆண்டொன்றுக்கு)**

**3. சீர்மரபினர் விடுதிகள் – ரூ.8,28,915/– (2011–12)**

(i) "2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 80 – பொது 101 – சீர்மரபினர் மற்றும் ஏனைய நாடோடி இனத்தவர் நலன் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JH - சீர்மரபினர் மாணவரில்லங்கள் – 99 – பல்வகை".
(து.தொ.கு. 2225–80–101–JH–9905) – **ரூ.27,63,050/– (ஆண்டொன்றுக்கு)**

(ii) **ரூ.1,00,875/– (2011–12)**

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 80 – பொது 101 – சீர்மரபினர் மற்றும் ஏனைய நாடோடி இனத்தவர் நலன் – I திட்டத்தில் சேராதது – AF – சீர்மரபினர் மாணவரில்லங்களும், உணவு இல்லங்களும் – 99 – பல்வகை".
(து.தொ.கு. 2225–80–101-AF-9908) – **ரூ.3,36,250/– (ஆண்டொன்றுக்கு)**

**4. சிறுபான்மையினர் நல விடுதிகள் – ரூ.29,250/– (2011–12)**

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – LA – சிறுபான்மையினர் மாணவரில்லங்கள் – 99 – பல்வகை".
(து.தொ.கு. 2225–03–277–LA-9909) – **ரூ.97,500/– (ஆண்டொன்றுக்கு)**

6. மேலே பத்தி 4–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.60,41,100/– (ரூபாய் அறுபது இலட்சத்து நாற்பத்தோராயிரத்து நூறு மட்டும்) 2011–12–ஆம் ஆண்டின் இறுதித் திருத்த நிதி ஒதுக்கத்தில் மேற்சொன்ன கணக்குத் தலைப்புகளின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

7. 2011–12–ஆம் ஆண்டு இறுதி திருத்த நிதி ஒதுக்கத்தில் இத்தகைய ஒதுக்கீடு செய்யப்படுவதை எதிர்நோக்கி, இச்செலவினத்தை மேற்கொள்ள பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சிறுபான்மையினர் நல ஆணையர் ஆகியோருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. 2011–12–ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதி ஒதுக்கத்திற்கான முன்மொழிவுகள் நிதித்துறைக்கு அனுப்பும்போது இச்செலவினத்தை சட்டமன்ற பேரவையின் தனி கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு 2011–12–ஆம் ஆண்டு துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கப்படுவதற்கு தக்க கருத்துருவை அரசுக்கு சேர்த்து அனுப்புமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர்,

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சிறுபான்மையினர் நல ஆணையர் ஆகியோர் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

8. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை அதன் அ.சா. எண். 724/பி.மி.பி./2011, நாள். 18.01.2012–ல் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 1461 (ஆயிரத்து நானூற்று அறுபத்தொன்று).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**கோ. சந்தானம்,**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், சென்னை– 5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை –5.
சிறுபான்மையினர் நல ஆணையர், சென்னை–2.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
மாநில கணக்காயர், சென்னை – 18 / (பெயரில்).
மாநில கணக்காயர் (துணிக்கை – 1), சென்னை – 18 /(பெயரில்).
மாநில கணக்காயர் (துணிக்கை–2), சென்னை – 18 / (பெயரில்).
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 5.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை– 9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
நிதித் (வ.செ.பொது I/II/பி.மி.பி.) துறை, சென்னை–9.
பிற்படுத்தப்பட்டோர் , மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்சிறுபான்மையினர் நலத் (பிந3/சிநஆபி) துறை, சென்னை 9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்கள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.